# தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒட்டக்கூத்தர்

**பா.சு.தீபா**
**முனைவர் பட்ட ஆய்வு மாணவி**
**பதிவு எண் : 11616**
**லெட்சுமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர்,**
**மனோன்மணியம் சுந்தரனார்**
**பல்கலைக்கழகம்,**
**திருநெல்வேலி – 627012**

**மேற்பார்வையாளர்**
**முனைவர்.மா.நீலகண்டபிள்ளை**
**துறைத்தலைவர்,**
**தமிழ்த்துறை ஆய்வகம்**
**இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,**
**நெய்யூர் - 629802.**

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் இலக்கிய வரலாற்றில் பொற்காலமாகக் கருதப்படுவது பிற்காலச் சோழர்களின் காலமாகும். இக்காலத்தில் தமிழ் இலக்கியம் அமைப்பு, கருத்தியல் நிலைகளில் பெரிய மாற்றங்களையும், புலமைகளையும் கண்டது. விசயாலய சோழன் காலம் முதல் மூன்றாம் குலோத்துங்கன் காலம் வரையிலும் சோழர்கள் ஆட்சிச் சிறப்பிலும் இலக்கியக் சிறப்பிலும் சிறந்து விளங்கினர். இப்பெருமை மிக்க காலத்தில் ‘கவிச்சக்கரவர்த்தி’ எனப் போற்றப்பட்டவர் ஒட்டக்கூத்தர் ஆவார். இவர் சோழ நாட்டின் மிகச் சிறந்த அரசவை புலவராக விளங்கியவர். இக்கூத்தரின் படைப்பிலக்கியங்கள் மக்கள், மன்னர்களின் சமூக பண்பாட்டு வாழ்வியலை பிரதிபலிக்கின்றன.

**குறிப்புச் சொற்கள் :**

கவிச்சக்கரவர்த்தி – கவியுலக அரசன், காளக்கவி – சோழ மன்னனிடம் ‘காளம்’ என்ற விருது பெற்றவர் ஒட்டக்கூத்தர், கௌடப்புலவர் - உலக இயல்பைக் கடந்த வருணனைகளைப் பாடிய புலவர்.

**முன்னுரை**

தமிழக வரலாற்றில் சோழர்கள் மிக்க கல்விமான்களாயிருந்ததோடு கற்றோர்களை ஆதரித்தனர். இப்பெருமை மிக்க காலத்தில் சேக்கிழர், கம்பர், செயங்கொண்டார், புகழேந்தி, ஒட்டக்கூத்தர் போன்றோர் வாழ்ந்தனர். இவர்களுள் 'சர்வஞ்ஞக்கவி' எனப் புகழப்பட்டவர் ஒட்டக்கூத்தர். விக்கிரமச் சோழன், இரண்டாம் குலோத்துங்கச் சோழன், இரண்டாம் இராசராக சோழன் ஆகியோரின் அரசவைப் புலவராக சிறப்புற்று விளங்கிய பெருமைக்குரியவர் ஒட்டக்கூத்தர். 'கோவை யுலா அந்தாதிக்கோர் ஒட்டக்கூத்தன்' என்னும் அடைமொழி இவரின் சிறப்பினை உறுதிப்படுத்துகிறது. இவரது படைப்புகளில் சோழர் கால அரசியல் வாழ்வியல் கூறுகள் பாடுபொருள்களாக அமைந்துள்ளன.

**ஒட்டக்கூத்தர்**

ஒட்டக்கூத்தர் கவிராட்சசன், காளக்கவி, கௌடப்புலவர் போன்றப் பட்டங்களைப் பெற்றவராவர். இவர் தந்தையார் சிவசங்கர பூபதி, தாயார் வண்டமர் பூங்குழலி ஆவார். ஒட்டக்கூத்தர் முதலில் கூத்தர் என்றே அழைக்கப்பட்டார். இவர் தில்லை நடராசப்பெருமான் மீது மிகுந்த பக்திகொண்டவர். திருமுருகப்பெருமானுக்கு உடன் தோன்றல்களாக வந்த நவவீரர் மரபான செங்குந்தர் குடியில் பிறந்தார். அக்குடியினர் மிக்க தமிழ்பற்றும் புலமையும் சைவ ஒழுக்கமும் உடையவராவர். ஒட்டக்கூத்தர் தமிழ் பற்றினால் புலமையில் கரை கண்டவர். தமிழ்ப்புலவர் என்று கூறிக்கொண்டு, தமிழைப் பிழையாக உரைத்தால் அவரைச் சிறையில் அடைத்து விடுவார். ஒரு குறிப்பிட்ட நாட்களுக்குப் பிறகு சிறையில் அடைக்கப்பட்ட நபருக்குப் பிழைக்க ஒரே ஒரு வாய்ப்பு கொடுப்பார். அதாவது ஒட்டக்கூத்தர் கேட்கும் கேள்விக்கு சரியான பதிலைத் தந்தால் சிறையிலிருந்து விடுவிக்கப்படுவார். தவறானப் பதிலைக் கூறினால் தலையை வெட்டிவிடுவார் என செவி வழிச் செய்தி உண்டு.

அபிதான சிந்தாமணி, "செங்குத்தர் மரபிற் பிறந்து கூத்தர் என்னும் பெயருடன் வளர்ந்து கல்வி பயின்று புதுவைக்கிருந்த சடையன் தந்தையாகிய சங்கரனுக்கு உதவித் தொழில் புரிந்து வந்தனர். இவரை அவ்விடம் வந்த காங்கேய முதலியார் எனும் உபகாரி ஆதரித்துப் போற்றிக் கல்வி வல்லவராக்கிச் கவுடப்புலவன் கவிராசசன் எனப் பெயரிட்டனர்" எனக் குறிப்பிடுகிறது. ஒட்டக்கூத்தரின் பிறப்பு, இளமைப்பருவம் பற்றிய செவிவழிச் செய்திகள், கதைகள், இலக்கிய வரலாற்றில் இடம் பெற்றுள்ளன.

ஒட்டக்கூத்தர் பிறந்த ஊர் பற்றி மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. சோழ மண்டல சதகம் கூத்தரின் பிறப்பிடம் சீர்காழி எனக்குறிப்பிடுகிறது.

“ஒத்த துணர்ந்த நாடனைத்தும் ஒருங்கோடி உயர் கூத்தன்
கத்தி யலையத் துரத்தலும் கசிந்து காழிக் கவுணியர்கோன்
பக்தியுடனே தக்கன்மகப் பரணி பாடப்பணிந்து முத்தின்
வைத்த சிவிகை மகிழ்தே வைத்தார் சோழ மண்டலமே”

கூத்தர் தம் நூலில் பைரவர் வணக்கம் பாடியிருத்தல், பைரவக் கடவுள் சீழ்காழித் தலத்தில் எழுந்தருளியிருத்தல், சீர்காழியில் கூத்தருக்குத் திருவிழாக்கள் இன்றும் எடுக்கப்படுதல், கூத்தர் இயற்றியுள்ள நூல்களின் ஏட்டுச் சுவடிகள் சீர்காழி மடத்திலிருந்தே முதன்முதலாகக் கண்டெடுத்தல் ஆகிய நான்கு காரணங்களை ஆதாரமாகக் கொண்டு ‘சீர்காழி’ தான் கூத்தர் பிறந்த இடமாகும் என்பர்.சி.க.நாரயணசாமி முதலியார், மணவையே கூத்தரின் பிறப்பிடம் என்று உறுதியாகக்கூறுகிறார். “மணவயிர் கூத்தர், மணவை மண்கூத்தன் வகுத்த கவி” என்னும் சொற்றொடர்களில் இடம்பெறும் “மணவை” என்னும் மணக்குடியில் பிறந்தார் கூத்தர் என்கிறார். வண்ணக்களஞ்சியம் ஸ்ரீநாகலிங்க முனிவர்

“மணம் மரும் கூந்தலார் மாதர் நோக் கொன்று
மணவை வருங் கூத்தன்றன் வாக்கு”

என்றிருப்பதாக தமது செங்குத்தர் பிரபந்தத் திரட்டில் கூறுகிறார். மாயவரத்தில் உள்ள பூந்தோட்டம் இரயில் நிலையத்திற்கு அருகில் இருக்கும் ‘கூத்தனூரே கூத்தர் பிறந்த ஊராயிருக்க வேண்டும் எனக் கூறுவோரும் உண்டு.

**ஒட்டக்கூத்தர் - பெயர்க்காரணம்**

கூத்தர் என்னும் இயற்பெயரைக் கொண்ட ஒட்டக்கூத்தருக்கு, இப்பெயர் பெற்றதற்கான காரணங்கள் பல உள்ளன. தமிழப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம். “இவர் பிறர் பாடுகின்ற போது அப்பாட்டை ஒட்டிப் பாடுவதில் வல்லவராக இருந்தமையால் ஒட்டக்கூத்தர் என்பது காரணப் பெயராக வழங்கியது’ எனக் கூறுகிறது. விக்கிரம சோழனது மெய்கீர்த்தியைப் பற்றி ‘அரும்பைத் தொள்ளாயிரம்” என்ற பிரபந்தத்தை அரசவையில் அரங்கேற்றும்போது மன்னன் அந்நூலிலுள்ள ஒரு செய்யுளை எடுத்து தனக்கு ஒட்டப் பாடும்படி பணித்தார். அவ்வாறே கூத்தர் பாடியதால் ‘ஒட்டக்கூத்தர்’ எனப்பட்டார் ஒட்டம் என்பது பந்தயம் என்னும் பொருளைத் தரும் ஆகையினால் பந்தயம் வைத்துப் பாடுவதில் சிறப்புப் பெற்றதால் இப்பெயர் வழங்கப்பட்டது என்பர்.

விக்கிரம சோழன் மீது இயற்றப்பட்ட உலாவில் வரும்,

‘கையும மலரடியும் கண்ணும் கனிவாயும்
செய்ய கரிய திருமாலே’

என்றக் கண்ணியை ஒட்டிப் பாடும்படி புலவரைக் கேட்டுக் கொள்ள

“…………………. வையம்
அளந்தால் அகளங்கா ஆலிலை மேற்பள்ளி
வளர்ந்தால் தளந்தா னென் மாள்”

என ஒட்டிப் பாடி முடித்துக் கொடுத்து ஒட்டக்கூத்தர் எனப் பெயர் பெற்றார். செங்குத்தர் மரபினைச் சோந்தவர்கள் திரண்டு வந்து, தமது மரபின் பெருமை விளங்க ஒரு பிரபந்தம் இயற்ற வேண்டுமென்று பணித்தார். அதற்கு கூத்தர் மறுத்தார். பின்பு ஒரு நிபந்தனையுடன் பாடுவதற்கு ஒப்புக்கொண்டார். அதாவது தாம் பாடும் ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு தலை வேண்டும். அதுவும் செங்குலத் தலைச்சன் பிள்ளைகளின் தலைகளைக் காணிக்கையாகக் கொடுக்கும்படி கட்டளையிட்டார். இந்த கட்டளையை செங்குத்த மரபினர் ஏற்றனர். கூத்தர் அத்தலைகளையெல்லாம் ஒன்றன் மேல் ஒன்று அடுக்கி வைத்து அத்தலையாசனத்தின் மீதிருந்து,

“கலைவாணி நீயுலகி ருப்பநுவுங் கல்வியுணர் கவியல்லோரை
நிலையாகப் பரப்பதுவு மலர்நாவில் வாழ்வதுவு நிசமே யன்றோ
சிலைவாண ளாவிருந்தா யிரம்புயங்கள் துணிந்து முயல் சீவனுற்றாள்
தலையாவி கொடுத்திடுஞ் செய்குந்தருயிர் பெற்றி நீ தயை செய்வாயே”

என்று கலைமகைள வேண்டிப் பாட, வெட்டப்பட்ட தலைகள் அனைத்தும் தத்தம் உடல்களில் வந்து ஒட்டிக்கொண்டன. இத்தகு அரிய செயலைச் செய்தமையால் கூத்தர் ஒட்டக்கூத்தர் என்னும் பெயரைப் பெற்றார் என்பர்.

**ஒட்டக்கூத்தரின் காலம்**

ஒட்டக்கூத்தரின் காலத்தினை சோழர் ஆட்சிக் காலத்தினைக் கொண்டு ஐயமின்றி காணிக்க முடிகிறது. ஒட்டக்கூத்தர் என்னும் புகழ்மிக்க தமிழ்ப்புலவர் விக்கிரம சோழன் ஆட்சி (கி.பி.1118-1135). இரண்டாம் குலோத்துங்கன் ஆட்சி (கி.பி.1133-1150) இரண்டாம் இராசராசன் ஆட்சி (கி.பி.1146-1163) ஆகிய மூன்று சோழ மன்னர்கள் காலத்தில் வாழ்ந்தவர் ஆவார். எனவே இவர் வாழ்ந்த காலம் கி.பி.12 ஆம் நூற்றாண்டாகும். எனவே கி.பி.12-ஆம் நூற்றாண்டில் தான் ஒட்டக்கூத்தர் வாழ்ந்தார் என்பது இறுதியான முடிவாகும்.

**தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒட்டக்கூத்தர்**

தமிழ்நாட்டு வரலாற்றில் பன்னிரண்டாம் நூற்றாண்டு சோழப் பேரரசு நிலைபெற்று நிலவிய காலமாகும். 'கி.பி.12-ஆம் நூற்றாண்டில் தான் ஒட்டக்கூத்தர். கூத்தர் என்பது நடனமாடும் கடவுளாகிய சிவபெருமானின் பெயர். அவர் ஒரிசா நாட்டோடு பெற்றிருந்த தொடர்பு காரணமாக ஒட்ட என்ற அடையுடன் ஒட்டக்கூத்தர் என்று வழங்கப்பெற்றார்'. அந்த சொல்லை விளக்குவதற்காக வேறு வகையில் காரணம் கற்பிக்கப்பட்டு கதை புனையப்பட்டதும் உண்டு. பிறர் செய்யும் தவறுகளைக் கடுமையாக எடுத்துரைத்துக் கடிபவர் எனக் குறிப்பிடுகிறார். ஒட்டக்கூத்தரின் மூவருலாவும், தக்கயாகப் பரணியும் குலோத்துங்கள் பிள்ளைத்தமிழும் கி.பி.12-ம் நூற்றாண்டினைச் சார்ந்தவை என ச.வே.சு குறிப்பிடுகிறார்.

ஒட்டக்கூத்தர் "கைக்கோளர் என்னும் மரபினைச் சார்ந்தவர். இவர் பிறந்த மரபின் சிறப்பினை இவர் இயற்றிய ஈட்டியெழுபது என்னும் நூலில் புகழ்ந்துரைக்கின்றனர். ஒட்டக்கூத்தரின் மூவருலா மூன்று அரசர்களைத் திருமாலின் பரம்பரையினர் என்று கூறும் இந்நூல் சோழர்களின் வம்சாவழியை விரிவாகக் கூறுகிறது. அதோடு விக்கிரம சோழனைத் தியாக சமுத்திரன் எனப் பாராட்டும். குலோத்துங்கச் சோழன் தில்லையில் செய்த திருப்பணிகளைச் சுட்டும், இவனது மரபு ரகுவம்ச அரசனான திலீபனிலிருந்து தொடங்குவதாகக் கூறுகிறது. இராசராசன் உலா ஒட்டக்கூத்தரின் இறுதிக்காலத்தில் எழுதப்பட்டது. இராசராசனின் மரபு பிரம்மா என்ற கடவுளிலிருந்து தொடங்குவதாக இதில் குறிக்கப்பட்டள்ளது என்கின்றனர் அறிஞர் பெருமக்கள்.

"மலரி வருங்கூத்தன்" எனத் தண்டியலங்கார மேற்கோள் குறிப்பதால் 'மலரா' என்னும் ஊரில் பிறந்திருக்கலாம். அதோடு நாராயணசாமி முதலியாரின் கூத்த சரிதமும் செங்குந்தர் பிரபந்த திரட்டும் திருமணவூர் மணக்குடி என்கிறது. மூன்று வேந்தர்களின் முழுமையான அன்புக்குரியவராக விளங்கியுள்ளார் என தமிழ் இலக்கிய வரலாறு குறிப்பிடுகிறது. இவ்வாறாக, அனைத்து இலக்கிய வரலாறுகளும் ஒட்டக்கூத்தரின் வரலாற்றினையும் அவரின் படைப்புகளையும் பதிவு செய்கின்றன. 'ஒட்டக்கூத்தரின் மூவருலாவும் கம்பரின் கம்பராமாயணமும் சோழர் காலத்து இலக்கிய வானில் ஒளிமிக்க விண்மீன்களாயின்" எனவும் வரலாற்று அறிஞர் என் சுப்பிரமணியம் "இரண்டாம் குலோத்துங்கச் சோழன் காலத்தை தமிழலக்கியத்தின் வெள்ளிக்காலம்" என்றும் குறிப்பிட்டுள்ளனர். இது சோழர்களின் காலம் முழுமைக்கும் பொருந்தும். ஏனெனில் சோழர்களின் அவையில் பெரும்புலவலர்கள் இருந்து தமிழுக்குப் பெரும் தொண்டாற்றினர் என்பதற்குச் சான்றாகும். சோழ மன்னனின் ஆட்சி காலத்துக்கே பெருமையையும் புகழையும் ஈட்டித் தந்தவர்களில் ஒட்டக்கூத்தரும் ஒருவராவர்.

ஒட்டக்கூத்தரும் கம்பரும் உடன்காலத்தவர்கள் என்றும் அவர்களுக்குள் புலமைக் காய்ச்சல் புகைந்து கொண்டே இருந்தது என்றும் பல செவிவழி வரலாறுகள் உண்டு என்கிறார் கே.கே.பிள்ளை.

**ஒட்டக்கூத்தரின் பாட்டுக்கு இரட்டைத்தாழ்ப்பாள்**

விக்கிரம சோழன் கி.பி.1118 முதல் கி.பி.1135 வரை சோழ மண்டலத்திற்குச் சக்கரவர்த்தியாக அரசு புரிந்தான். இவரது ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த கூத்தரின் ஆற்றலையும் அவரது குணப்பெருமையையும் உணர்ந்து அரசவைக் கவியாக்கினான். கூத்தர் வாணியின் அருள்பெற்று வரகவியானார். தேவியின் வரம் பெற்று திரும்பிய கூத்தரை விக்கிரம சோழன் எதிர்கொண்டு அழைத்தான். அந்நாள் முதல் தன் அரியாசனத்திற்கு அருகே அவரையும் அமரச் செய்தார். தன் மைந்தன் இரண்டாம் குலோத்துங்கனின் குருவாக நியமித்தான். இரண்டாம் குலோத்துங்கன் இராசதந்திர சாத்திரங்களிலும் முத்தமிழ் அறிவிலும் சிறந்து விளங்கினான். இந்தச் சூழ்நிலையில் விக்கிரம சோழனின் இறுதிக்காலத்தில் மைந்தன் பொருட்டு கவலை மேலிட கூத்தரை அழைத்துப் பாலனை ஒப்புவித்து அவனுக்குரிய முடிசூட்டுதல், மணம் முதலியவைகைள நடத்தி வைக்கும் பொறுப்பை, கூத்தரிடம் விட்டு கவலை நீங்கி உயிர் நீத்தார். இரண்டாம் குலோத்துங்கனுக்கு முடிசூட்டி வைத்தார் ஒட்டக்கூத்தர். அதன் பின்னர் மன்னனுக்கு திருமணம் செய்வதற்கு ஒழுக்கம், குணம், அழகு எல்லாவற்றிலும் குலோத்துங்கனுக்கு இணையானவளைத் தேடினார். அப்பொழுது பாண்டிய நாட்டை மதுரையிலிருந்து ஆட்சி புரிந்து வந்த பராக்கிரம பாண்டியனின் மகளை மணம் பேசி முடிக்க அரசவைப் புலவரான கூத்தர் உறையூரை விட்டு மதுரைக்குப் புறப்பட்டார். பாண்டியனிடம் கூத்தர் பெண் கேட்க, மனம் உவந்த மன்னன். 'நும் மன்னன் எங்கள் குலத்துப் பெண்ணை ஏற்கத் தக்கவனே" என்று கூற, உடனே கூத்தர் சோழனின் படை, மாலை, கொடி, நகரம், நதி, வீரம் ஆகியவற்றை உயர்த்தி பேசி அவைகளெல்லாம் பாண்டியனுடைய அவைக்கு ஈடாகாது என்னும் பொருள்பட பதில் கூறினார். கூத்தரது பாட்டிற்கு எதிர்பாட்டாக பாண்டியன் அவைப்புலவர் புகழேந்திரப் புலவர், கூத்தர் சிறுமையெனப் பாடியதையெல்லாம் பாண்டியனின் பெருமையாகப் பாடி முடித்தார். கூத்தர் பாண்டியனிடம் ஒப்புதல் பெற்று குலோத்துங்கனுக்கு திருமணம் செப்பவிக்க மணம் பேசி முடித்தார். திருமணம் நன்னாள் நெருங்க சோழ மன்னன் சுற்றம் சூழ மதுரைக்கு வந்து திருமணம் செய்தான். மதுரையில் சில நாட்கள் தங்கியபின், உறையூர் சென்ற மன்னனுடன் பாண்டிய மகளுடன் அரசவைப் புலவர் புகழேந்தியும் உடன் சென்றார். பாண்டியன் அவையில் தன்னைப் பகைத்த புகழேந்தியைச் சிறைப்படுத்தினார். மன்னனுக்குச் சீதனமாக வந்து சேர்ந்த ஒரு புலவனைச் சுலபமாக சிறையிலிட்டார் சில

மாதங்கள் கழிந்தன. ஒரு நாள் குலோத்துங்கன் நகர்வலம் வருகின்றான். சிறையில் புகழேந்திப் புலவர் இருப்பதைக் கண்டு மன்னன் கூத்தரிடம் வினவினான் அதற்கு கூத்தர் புகழேந்தியார் சோழனை சிறுமைப்படுத்திய செய்தியைக் கூறி

"மானிற்கு மோ அந்த வாளரி வேங்கைமுன் வற்றிச் செத்த
காணிற்கு மோ அவ் வெரியுந் தழல் முன் கணை கடலில்
மீனிற்கு மோவந்த வெங்கட் சுறவமுன் வீசுபனி
தானிற்கு மோ அக் கதிரோன் உதயத்திற்றார் மன்னனே"

என்றும் பாடினார். இதற்கு எதிர்பாட்டாக குலோத்துங்கள் அனுமதிப்பெற்று புகழேந்திப் புலவரும் பாடி தனது புலமையைப் புலப்படுத்தினார். இச்சூழ்நிலையில் இளவரசி தம் மதிப்பிற்குரிய புகழேந்திப் புலவன் சிறையில் இருப்பதை மன்னர் அறிந்தும் அறியாமல் போல் நடந்து கொள்கிறார் என்பதை நினைத்து மிகவும் வருந்துகிறாள். அத்தருணத்தில் மன்னன் அந்தப்புரம் அடைகிறான். அங்கு கதவு அடைக்கப்பட்டிருந்தது பலமுறை கதவைத் தட்டுகிறான் கபாடம் திறந்த பாடில்லை. இன்மொழி பல புகல்கிறான். இறைஞ்சி நிற்கிறான். அமைதியே பதிலாய் வருகின்றது. மன வருத்தத்துடன் அரண்மனை திரும்புகிறான் மறுநாள் காலை மன்னன் தலைவியின் ஊடலைத் தீர்க்க அரசவை புலவரான கூத்தரை அனுப்பி, விரைந்து சென்று தலைவியின் கோபத்தை ஆற்ற ஆணையிடுகிறான். கூத்தரும் அந்தப்புரம் சென்று தாழிட்ட அறையின் புறம் நின்று "ஈழ நாட்டிலும் இலங்காபுரியிலம் கபாடபுரத்திலும் கலியாணபுரத்திலும் உள்ள வீரர்களது மார்பு கபாலக் கதவுகளைத் திறந்த மன்னன் கதவண்டை நிற்கிறான். இரங்கியேனும் கதவைத் திறந்து விடுவாய்" என்னும் பொருள்பட பாடுகிறார். அதனைக்கேட்ட தலைவி தனது அறையின் மற்றொரு தாழ்ப்பாளையும் இட்டு விடுகிறாள். கூத்தர் தலைவியின் ஊடலுக்குக் காரணம் எதுவென்று உணர்ந்து அரண்மனை வந்து மன்னனிடம் நடந்ததை அறிவிக்கிறார். அரசன் உடனே புகழேந்தியை விடுவிக்க ஆணையிடுகிறான். விடுதலைப்பெற்ற புகழேந்திப் புலவர் பாண்டியன் மகளை புத்திமதி சொல்லி ஊடல் தீர்க்கிறார். இதுவே கூத்தருக்கு என்றென்றும் "ஒட்டக்கூத்தர் பாடலுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்" என்ற அழியாதப் பெயரை வாங்கிக்கொடுத்த நிகழ்வாகும்.

**ஒட்டக்கூத்தரின் படைப்பிலக்கியங்கள்**

ஒட்டக்கூத்தர் மூவருலா, குலோத்துங்கச்சோழன் பிள்ளைத்தமிழ், தக்கயாகப்பரணி, கலிங்கப்பரணி, இராமாயண உத்தரகாண்டம், காங்கேயன் நாலாயிரக்கோவை, அரும்பைத் தொள்ளாயிரம், ஈட்டியெழுபது, எழுப்பெழுபது, கனிப்பொருபது, எதிர்நூல், கண்டன்கோவை, தில்லையுலா போன்ற நூல்களைப் படைத்துள்ளார். அதோடு இவர் எழுதிய பிற பாடல்கள் தனிப்பாடல் திரட்டில் இடம் பெற்றுள்ளன.

**முடிவுரை**

ஒட்டக்கூத்தர் சோழ நாட்டில் வாழ்ந்த அரசவை புலவர்களுள் சிறந்தவர். மலரி, கூத்தனூர், மணக்குடி, சீர்காழி ஆகிய இடங்கள் ஒட்டக்கூத்தரின் பிறப்பிடம் குறித்த ஆய்வுக் கருத்துக்கள் நிலவுகின்றன. செய்யுட்களை ஓட்டிப்பாடுவதில் வல்லவராததால் ஒட்டக்கூத்தர் என்னும் பெயர் பெற்றவர். இவர் மூன்று சோழ மன்னர்களின் காலத்தில் வாழ்ந்தவர் அதனால் இவரது காலம் கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டு என தெளிவாக அறிய முடிகிறது. ஆனால் இளமைப் பருவம், இறப்புக் குறித்த செய்திகள் கிடைத்தில. 'சோழர் காலம் தமிழர் பண்பாட்டின் பொற்காலம்' எனப் போற்றும் நீலகண்ட சாஸ்திரியின் கூற்றை மெய்ப்பிக்கும் வண்ணம் சோழர் காலத்தில் இலக்கியங்கள் பெருமளவில் தோற்றம் பெற்றுள்ளன. அதற்கு ஒட்டக்கூத்தரின் பங்கு அளப்பரியதாகும்.

**துணைநூற்பட்டியல்**


1. இராசராம் துரை, மூவருலா (விளக்கவுரை)
   முல்லை நிலையம், 9, பாரதி நகர் முதல் தெரு,
   சென்னை-17 முதற்பதிப்பு – 2000.
2. இராசு.செ.சோழ மண்டல சதகம்,
   தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு – 1994.
3. டாக்டர். கதிர் முருகு, ஒட்டக்கூத்தரின் ஈட்டி எழுபது (மூலமும் உரையும்) சாரதா பதிப்பகம் ஜி-4, சாந்தி அடுக்ககம், சென்னை, முதற்பதிப்பு – 2009.
4. கதிரைவேற்பிள்ளை, நா தமிழ்மொழி அகராதி சாரதா பதிப்பகம், சென்னை-14
   முதற்பதிப்பு-2003.
5. கார்த்திகேசு சிவத்தம்பி, தமிழில் இலக்கிய வரலாறு நியூ செஞ்சுரிபுக் ஹவுஷ்
   சென்னை-98 மறுபதிப்பு – 2007.
6. சிங்காரவேலு முதியார், அபிதான சிந்தாமணி, சாரதா பதிப்பகம், சென்னை-14
   மறுபதிப்பு – 1999.
7. டாக்டர்.சி. பாலசுப்ரமணியன் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர், பாரி நிலையம்,
   சென்னை- 108. முதற்பதிப்பு – 2012.
8. டாக்டர் வ.சு.ப.மாணிக்கம், தமிழ்க்காதல் மெய்ப்பன் பதிப்பகம், சிதம்பரம் -
   608001.
9. ஸ்ரீநிவாஸரங்கஸ்வாமி, நான் கண்ட ஒட்டக்கூத்தர், நாம் தமிழர் பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை – 5, இரண்டாம் பதிப்பு – 2004.